**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101950

1. District மாவட்டம்: திண்டுக்கல் PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு [illegible] Year ஆண்டு: 2023 FIR No மு.த.அ. எண்: 03/2023 Date நாள்: 16.08.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் Date to நாள் வரை 14.08.2023 at 11.45 hrs / 14.08.2023 at 15.00 hrs
   Time Period நேர அளவு Time from நேரம் முதல் Time to நேரம் வரை 15.08.2023 at 10.30 hrs
   (b) Information Received at PS காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Date: 16.08.2023 Time நேரம்: 07.00 hrs.
   (c) General Diary Reference பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் Entry No(s) எண் Time நேரம்

4. Type of Information தகவலின் வகை Written/ Oral எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலமாக

5. Place of Occurrence குற்ற நிகழ்விடம் (a) Direction and Distance from PS (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 95 கி.மீ, மேற்கு
   Beat Number முறைக் காவல் எண் (b) Address முகவரி: o/o வருவாய் ஆய்வாளர் அலுவலகம், வேடசந்தூர் மேற்கு, வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்: — District மாவட்டம்:

6. Complainant /Informant குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் (a) Name பெயர்: V. மாரிமுத்து (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: வேலுச்சாமி
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 39/2023 (d) Nationality நாட்டினம்: இந்தியன் (e) Passport No வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue வழங்கப்பட்ட நாள் Place of Issue வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில்: விவசாயம் (g) Address முகவரி: 1/61, [illegible], [illegible], வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. [illegible], வருவாய் ஆய்வாளர், வேடசந்தூர் மேற்கு, வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிடுதலில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

10. Total value of properties stolen / involved : ——
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு**

11. Inquest Report / Un-natural death Case No. if any. ——
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்**

12. FIR Contents (Attach separate sheet, if required) :
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

V. marimu

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு**

[signature] 16/08/23
Signature of the Officer in-charge, Police Station
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. Date & Time of despatch to the court:
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**
16.08.2023 - 10.35 hrs

Name: **பெயர்** P. Vigneshwaran
Rank: **நிலை** ...................... No. **எண்** ........
காவல் ஆய்வாளர்
[illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2023 u/s 7 (a) of Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.**

இன்று 16.08.2023ம் தேதி காலை 7 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்த போது திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தாலுகா, காவேரியம்மாபட்டி கிராமத்தை சேர்ந்த திரு.வேலுச்சாமி என்பவரின் மகன் திரு.மாரிமுத்து என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விபரம் பின்வருமாறு.

அனுப்புநர்:

V.மாரிமுத்து,
த/பெ வேலுச்சாமி,
1/61 மேற்குத் தெரு,
காவேரியம்மாபட்டி,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

பெறுநர்:

காவல் ஆய்வாளர்,
லஞ்ச ஒழிப்புத் துறை,
திண்டுக்கல் மாவட்டம்.

ஐயா,

நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். தற்போது கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். எனது தந்தை வேலுச்சாமி அவர்கள் கிராமத்தில் தங்கி விவசாயம் செய்து வருகிறார். எனது தாத்தா கந்தசாமி கடந்த 1989ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தாத்தா கந்தசாமியுடன் உடன் பிறந்தவர்கள் ஆறுமுக கவுண்டர் மற்றும் செல்லப்ப கவுண்டர் ஆகிய இரண்டு பேர் ஆவர். அவர்களும் இறந்துவிட்டார்கள். எனது தாத்தா மற்றும் அவருடன் உடன்பிறந்த மற்ற இருவர் பெயரில் காவேரியம்மாபட்டி கிராமத்தில் சுமார் 1ஏக்கர் 20செண்ட் நிலம் உள்ளது. அதனை நாங்களும் எங்கள் தாத்தா கந்தசமியுடன் உடன் பிறந்தவர்கள்

வாரிசுகளும் எங்கள் கிராம வழக்கப்படி பங்கு பாகம் பிரித்து தற்போது வரை விவசாயம் செய்து வருகிறோம். எனது தாத்தா கந்தசாமி 1989ம் ஆண்டு இறந்துவிட்டபோதும் அவரின் இறப்புச்சான்றை கடந்த 2021ம் ஆண்டுதான் காவேரியம்மாபட்டி கிராம ஊராட்சியிலிருந்து பெற்றோம். மேலும் இறப்புச் சான்று இல்லாததால் எனது தாத்தா கந்தசாமியின் ஒரே மகனான எனது தந்தை வேலுச்சாமியை அவரின் வாரிசாக காண்பித்து வாரிசு சான்றினை இதுவரை நாங்கள் பெறவில்லை. எங்களுக்கும் அது குறித்த விபரம் தெரியாததால் விட்டுவிட்டோம். தற்போது எனது தாத்தா கந்தசாமியின் இறப்புச் சான்றிதழ் கிடைத்துவிட்டதால் வாரிசு சான்றிதழ் வேண்டி கடந்த 07.08.2023 அன்று ஒட்டன்சத்திரத்தில் உள்ள சிவம் கம்யூட்டர் சென்டரில் எனது தந்தை வேலுச்சாமி பெயரில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பம் செய்தேன். அதன் விண்ணப்ப எண் TN-720230807137 என்பதாகும். எனது தந்தை கொஞ்சம் விபரம் தெரியாதவர் என்பதால் எனது மொபைல் எண் 99959-27591 என்ற நம்பரை கொடுத்திருந்தேன். எனவே 14.08.2023 அன்று சுமார் 11.45 மணிக்கு எனது மொபைல் போனிற்கு 79042-71746 என்ற எண்ணிலிருந்து கால் வந்தது. அதில் பேசிய நபர் அவரது பெயர் பாண்டியன் என்றும் ஒட்டன்சத்திரம் ஆர்.ஐ என்றும் எனது தந்தை பெயரில் வாரிசு சான்றிதழ் விண்ணப்பித்தது தொடர்பாக அழைத்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் விபரங்களை நான் தெரிவித்த போது, RI பாண்டியன் அவர்கள் என்னிடம் உங்கள் தாத்தா இறந்து கிட்டத்தட்ட 34 வருசம் ஆகிவிட்டது. நீங்கள் நீதிமன்றம் சென்றுதான் வாங்க வேண்டும். அப்படி சென்றால் குறைந்தபட்சம் ரூ.50ஆயிரம் செலவாகும் ஆனால் நான் முடித்து தருகிறேன் நேரில் வாருங்கள் என்று தெரிவித்தார். அதற்கு நான் அவ்வளவு பணமெல்லாம் கிடையாது சார் நாங்கள் கஷ்டத்தில் இருக்கிறோம் உதவி செய்யுங்கள் என்று கூறினேன். அதற்கு RI பாண்டியன் அவர்கள் நேரில் ஒட்டன்சத்திரம் தாலுகா அலுவலகத்திற்கு வாருங்கள் பேசிக்கொள்ளலாம் என்று தெரிவித்தார். உடனே நானும் எனது தந்தை வேலுச்சாமியை கூட்டிக்கொண்டு அன்றே ஒட்டன்சத்திரம் தாலுகா அலுவலகத்திற்கு சுமார் 3 மணியளவில் சென்று

எனது மொபைலில் RI பாண்டியன் அவர்களிடம் பேசினேன். போனில் அவர் என்னிடம் தற்போது ஒரு முக்கிய வேலையாக மதுரை வந்துவிட்டதாகவும் 15ம் தேதி காலையில் ஒட்டன்சத்திரம் தாலுகா அலுவலகம் பின்புறமுள்ள RI கோட்டரசில் வந்து பார்க்குமாறு தெரிவித்தார். அதற்கு நான் நாளை சுதந்திரதினம் லீவு தானே சார் என்று கேட்டேன். அதற்கு அவர் லீவுதான் இருந்தாலும் நான் அலுவலகத்தில் இருப்பேன் வாருங்கள் என்று கூறினார். அதன்படி நானும் என் தந்தையும் நேற்று 15.08.2023 காலை சுமார் 10.30 மணியளவில் ஒட்டன்சத்திரம் தாலுகா அலுவலகத்தின் பின்புறமுள்ள RI கோட்டரசில் திரு.பாண்டியன் அவர்களை சந்தித்து விபரங்களை தெரிவித்தோம். அதனை கேட்டுக்கொண்ட அவர் வாரிசு சான்றிதழ் தற்போது பெறவேண்டுமென்றால் நீதிமன்றம்தான் செல்லவேண்டும். ரூ.50ஆயிரத்திற்கு குறையாமல் செலவாகும். ஆனால் நான் முடித்து தருகிறேன் 10ஆயிரம் எனக்கு கொடுத்துவிடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் சார் எனது தந்தை ஆடு,மாடுகளை வைத்து வளர்த்து வருகிறார், நானும் கேரளாவில் வியாபாரம் செய்கிறேன் உடனே அவ்வளவு பணம் எங்களால் புரட்டிக் கொடுக்க முடியாது கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்றேன். அதற்கு RI அவர்கள் 34 வருசம் கழிச்சு வாரிசு சான்றிதழ் கேட்டால் யாரும் இதற்கு குறைவாக செய்து தரமாட்டார்கள். தாலுகா ஆபிசிலும் காசு கொடுக்க வேண்டியிருக்கும். அதனால் ரூ.2ஆயிரம் குறைத்துக்கொண்டு ரூ.8ஆயிரம் கொடுத்துவிடுங்கள் நான் வாரிசு சான்றிதழ் விண்ணப்பத்திற்கு உடனே சிபாரிசு செய்து பெற்றுத்தர ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். நான் இன்னும் கொஞ்சம் குறைக்க முடியுமா என்று கேட்டேன் அதற்கு அவர் ரூ.8000/- ரெடி பண்ணிக்கொண்டு எப்போது வேண்டுமானாலும் என்னை வந்து பாருங்கள் வேலையை முடித்து தருகிறேன் என்று கறாராக சொல்லிவிட்டார். நானும் எனது தந்தையும் தற்போது கையில் பணம் எதுவும் இல்லை வீட்டிற்கு சென்று எனது அம்மாவின் வங்கி கணக்கிலிருந்து பணத்தை எடுத்து கொண்டு நாளை 16.08.2023 அன்று வந்து பணத்தை தருகிறோம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டோம். திண்டுக்கல்

மாவட்டம் ஒட்டிடன்சத்திரம் பிர்க்கா RI திரு.பாண்டியன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.8000/-த்தை கொடுத்து எனது வேலையை முடிக்க விருப்பமில்லை. எனவே அவர் கேட்ட பணம் ரூ.8000/-த்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் ஒட்டன்சத்திரம் பிர்க்கா RI திரு.பாண்டியன் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் ஆன்லைனில் எனது தந்தை திரு.வேலுச்சாமி அவர்கள் பெயரில் விண்ணப்பித்த விண்ணபபத்தின் ஆன்லைன் ஸ்டேட்டஸ் நகலை இணைத்துள்ளேன். இப்படிக்கு, ஒப்பம்/- (V.Marimuthu), நாள். 16.08.2023, இடம்.திண்டுக்கல்.

Sir,

Received this report on 16.08.2023 at 07.00 hrs. and made a confidential verification between 07.15 hrs. and 08.15 hrs. on the general reputation of the accused, motive, reliability and antecedent of the informant and came to know that nothing adverse against the informant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC Cr.No.03/2023 u/s 7 (a) of Prevention of Corruption Act 1988 as amended in 2018 was registered today at 08.30 hrs. The original F.I.R. along with the report was sent to the Hon'ble Special Judge / Chief Judicial Magistrate, Dindigul and remaining copies were sent to the officers concerned.

16/08/23

**(P.Palanisamy)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul.